Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

தமிழ் Mirror    www.tamilmirror.lk

THURSDAY, FEBRUARY 27 2025

வியாழக்கிழமை 27, பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர் 168 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# இலங்கையில் முதலாவது ‘ஷெல்’ எரிபொருள் நிலையம்

இலங்கையில் ‘ஷெல்’ வர்த்தக குறியீடு உடைய முதலாவது எரிபொருள் நிலையம் புதன்கிழமை (26) அன்று அம்பத்தலேயில் உள்ள பி எஸ் குரே நிரப்பு நிலையத்தில் திறக்கப்பட்டுள்ளது.

இது ஷெல் பிராண்ட்ஸ் இன்டர்நேஷனல் ஏஜி (ஷெல்) மற்றும் ஆர்எம் பார்க்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவை சில்லறை தர அடையாள உரிம ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டத்தை தொடர்ந்து, ஷெல் மற்றும் ஆர்எம் பார்க்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் துணை நிறுவனங்கள் மார்ச் 2024 இல் தயாரிப்பு விநியோக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

ஆர்எம் பார்க்ஸ் (பிரைவேட்) லிமிடெட் என்பது Tristar குழுமத்தின் (Tristar) கூட்டு நிறுவனமாகும், இது கீழ்நிலை எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் சேவை செய்யும் ஒரு முழு ஒருங்கிணைந்த எரிசக்தி தளவாட வணிகமாகும். மற்றும் ஆர்எம் பார்க்ஸ் Inc., வட அமெரிக்க எரிபொருள் சில்லறை விற்பனை சந்தையில் ஷெல் எரிபொருளின் அனுபவமிக்க விநியோகஸ்தர் ஆகும்.

2023 இல் இலங்கை பெற்றோலியம் மற்றும் எரிசக்தி அமைச்சினால் 20 வருட காலத்திற்கு செயற்படுவதற்கான ஒப்பந்தம் இந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

# “பட்ஜெட் பிச்சையல்ல”

வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் என்பது யாரும் யாருக்கும் இடும் பிச்சை அல்ல, குறித்த ஒதுக்கீடுகள் மக்களின் உரிமை என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ். ஊடக மையத்தில் புதன்கிழமை (26) நடைபெற்ற வாராந்த ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இந்த நாட்டினிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற அனைவருமே, வரி செலுத்துவோர்களாகவே இருக்கின்றோம். சாதாரண குடும்பம் ஒன்று தங்களுடைய அன்றாடச் செயற்பாடுகளின் ஊடாக மாதாந்தம் 40,000 ஆயிரம் ரூபாய் வரியை மறைமுகமாகச் செலுத்திக் கொண்டிருக்கின்றது.

ஆக, வரவு-செலவுத் திட்டத்தில் ஊடாக கிடைக்கின்ற நிதி ஒதுக்கீட்டை பெற்ற




பயன்படுத்துவது என்பது எமது உரிமை என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையிலேயே, ஒரு வரவு-செலவுத் திட்டத்தில், ஒவ்வொரு துறைக்காகவும் ஒதுக்கீடுகளிலும் எமக்கான ஒதுக்கீடுகள் காணப்படுகின்றன.

அதைவிட மாகாண சபைக்கான ஒதுக்கீடுகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் சரியான முறையில் எமக்கான ஒதுக்கீடுள் வழங்கப்படுகின்றனவா என்பதைத் தொடர்ச்சியாக அவதானித்து அதனை உறுதிப்படுத்துவதே மக்கள் பிரதிநிதிகளின் கடப்பாடாக இருக்க முடியும்.

ஒருவேளை, எதாவது துறைசார் நிதி ஒதுக்கீடுகள் பகிர்ந்தளிக்கப்படும் போது எமது பிரதேசம் புறக்கணிக்கப்படுமாயின் அதுதொடர்பாக எமது ஆழமான கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும்.

மாறாக, எமது பிரதேசங்களில் அடையாளப்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்களுக்கான விசேட நிதி ஒதுக்கீடுகளை மாத்திரம் சுட்டிக்காட்டி, மொத்த வரவு-செலவுத் திட்டத்தில் சிறு பகுதியே எமது மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறுவதும் அபத்தமானது.

கடந்த காலங்களில் குறுகிய அரசியல் நலன்களுக்காகவும் சுய தேவைகளுக்காகவும் எமது மக்களை உணர்ச்சியூட்டும் வகையில் எம்மவர்கள் சிலரினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளும் எமது மக்களின் இன்றைய கையறு நிலைக்கான காரணங்களில் ஒன்று என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

# சிறுபான்மை சமூகம் தொடர்பில் ஜெனீவா அமர்வில் பேச்சு



ஜெனீவாவில் புதன்கிழமை (26) அன்று நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது அமர்வில், இலங்கையின் சிறுபான்மை சமூகம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உரையாற்றினார். அதில், “தலைவர் அவர்களே, இப்பேரவையின் தலைவராக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறித்து, எனது

தொடர்ச்சி P2

# “இலங்கை மக்களுக்கு தொடர்ந்து ஜப்பான் ஒத்துழைப்பை வழங்கும்”

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்கும் ஜப்பானிய வெளிவிவகார பிரதி அமைச்சர் அகிகோ இகுவினாவுக்கும் (Akiko Ikuina) இடையிலான சந்திப்பு ஜெனீவாவில் புதன்கிழமை (26) இடம்பெற்றுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஐக்கிய நாடுகள் பேரவையின் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜெனீவாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, ஜப்பானிய வெளிவிவகார பிரதி அமைச்சர் அகிகோ இகுவினா கூறியதாவது,



“சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசிபிக்" என்பதை அடைவதில் ஜப்பானுக்கு இலங்கை ஒரு முக்கிய பங்காளி என்றும், பிராந்தியம் முழுவதும் ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பை அடைய ஜப்பான் தொடர்ந்து இணைந்து பணியாற்ற விரும்புகிறது.

தொடர்ச்சி P2



# வறட்சியால் 12,000க்கும் மேற்பட்டோர் பாதிப்பு

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக, பல பகுதிகளில் உள்ள மக்கள், தங்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகப் பேரிடர் மேலாண்மை மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, சுமார் 2,295 குடும்பங்களைச் சேர்ந்த 12,308 பேர் வறட்சியான காலநிலை காணமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பேரிடர் மேலாண்மை மையம் குறிப்பிட்டுள்ளது.

களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் வறட்சி காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இருப்பினும், எந்த இறப்புகளோ அல்லது காயங்களோ ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

இதற்கிடையில், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு 1.3 பில்லியன் டொலர் வருமானம்

இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் ஏற்றுமதி மூலம் நாட்டிற்கு 1.3 பில்லியன் டொலர் வருமானம் கிடைத்துள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் பொருள் ஏற்றுமதி



வருமானமானது, 3.51 சதவீத வளர்ச்சியாகவும், விவசாய ஏற்றுமதி வருமானமானது, 14.87 சதவீத வளர்ச்சியாகவும் பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2

# “ஆயுதம் காட்ட அழைத்து செல்வார்களோ”



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ புதன்கிழமை (26)அன்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு முன்னிலையாகி வாக்குமூலம் அளித்துள்ளார்.

அங்கு அவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்க விடுமுறை நாளில் என்னை அழைத்தனர். தெரிந்து கொண்டதன் பிரகாரம் எயார் பஸ் விவகாரம் தான், நான் பயப்படவில்லை. எனினும், ஆயுதத்தைக் காண்பிக்க அழைத்துச் செல்வார்களோ என்று தெரியவில்லை என்றார்.

விடுமுறை நாளில் எங்களை அழைத்து விசாரணை நடத்தி வாக்குமூலம் பெற்று,

தொடர்ச்சி P2



# “நாட்டை மீட்டெடுக்க ஒத்துழைப்பு தாருங்கள்”

தற்போதைய வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்கத் தேவையான ஒத்துழைப்பை தொடர்ந்து பெற்றுத் தருமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் இடையிலான விசேட சந்திப்பொன்று பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (25) இடம்பெற்றுள்ளது. இதன்போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இச்சந்திப்பில், இலங்கைக்கான அவுஸ்திரேலியா பிரதி உயர்ஸ்தானிகர் லலிதா கபூர் மற்றும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது செயலாளர் மேத்யூ லார்ட் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகருக்கும் இடையிலான சந்திப்பில் நாட்டில் நிலவும் பல்வேறு சமூக-பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் இங்கு நீண்டநேரம் கருத்துப் பரிமாறப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# 5 வருடங்களுக்கு பிறகு நாட்டுக்கு வந்த வாகனங்கள்

நாட்டின் தனியார் பயன்பாட்டிற்காக இறக்குமதி செய்யப்பட்ட முதல் தொகுதி வாகனங்கள் செவ்வாய்க்கிழமை(25) அன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன.

இலங்கை அரசாங்கம், கடந்த ஐந்து வருட இடைவெளிக்குப் பிறகு இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கான எடுத்த முடிவைத் தொடர்ந்து, இவ்வாறு முதல் தொகுதி வாகனங்கள் வந்தடைந்தன.

பொருளாதாரக் கட்டுப்பாடுகள் காரணமாக 2020ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட நீண்டகால இறக்குமதித் தடையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த நாட்டின் வாகனத் துறையில் இந்த நடவடிக்கை ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.

தொடர்ச்சி P2

# “வரி முறையை செயல்படுத்த வேண்டும்”



தற்போதைய சூழ்நிலையில் சேவைகள் ஏற்றுமதி வரியை அமுல்படுத்துவதைத் தவிர அரசாங்கத்திற்கு வேறு வழியில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நலிந்த ஜயதிஸ்ஸ ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

செவ்வாய்கிழமை (25) அன்று அமைச்சரவைக்குப் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அமைச்சர் ஜயதிஸ்ஸ, இது தொடர்பாக முன்னர் அதிக

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சிறுபான்மை சமூகம் தொடர்பில் ஜெனீவா அமர்வில் பேச்சு

வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற தேர்தல்களில், இலங்கை மக்கள், நாட்டை பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மாற்றத்தை நோக்கி வழிநடத்துவதற்கு, வலுவானதொரு ஆணையுடன் கூடிய புதிய அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்தனர். இத்தேர்தல்களின் முடிவுகள் நாட்டின் அனைத்துப் பகுதிகள், இனங்கள் மற்றும் மதங்களைச் சேர்ந்த மக்களிடமிருந்துமான ஒன்றுபட்ட குரலைப் பிரதிபலிக்குமாறு அமைந்தன.

தற்போதைய பாராளுமன்றமானது, இலங்கை வரலாற்றில் இரண்டு மலையக சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றும் ஒரு பார்வைக் குறைபாடுள்ள நபர் ஆகியோரைக் கொண்டதும், அனைத்து தரப்பினரையும் பிரதிநித்துவப்படுத்துவதுமான ஒன்றாவதுடன், இம்முறை அதிக எண்ணிக்கையிலான பெண்களைக் கொண்டதுமாக அமைந்துள்ளது.

பாலினம், இனம் அல்லது ஏனைய காரணிகளைப் பொருட்படுத்தாமல், நாட்டின் அனைத்து மக்களின் உரிமைகளையும் நிலைநிறுத்துவதில் கவனம் செலுத்தும், இலங்கையின் புதிய பாதையை இவ்வுள்ளடக்கம் பிரதிபலிக்கிறது.

பொருளாதார நெருக்கடி மக்கள் தொகையின் அனைத்துப் பிரிவுகளையும், குறிப்பாக ஏழ்மையான மற்றும் நலிவானவர்களை பெரிதும் பாதித்தது. பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திப்படுத்தலைத் தொடர்ந்து, நியாயமான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் பொருளாதார மாற்றம் மற்றும் சிறப்பான பொருளாதார ஜனநாயகமயமாக்கலுக்கான அடித்தளத்தை அமைக்கும் பணியில் அரசாங்கம் தற்போது ஈடுபட்டுள்ளது.

நமது மக்கள், குறிப்பாக நலிவடைந்த சமூகம் மீது பொருளாதார சவால்களின் தொடர்ச்சியான தாக்கத்தை நாங்கள் நன்கு அறிவதுடன், அவர்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை மேம்படுத்த தற்போது, தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நாம், 2025ஆம் ஆண்டுக்கான தேசிய பாதீட்டில், சமூக நலன் மற்றும் பாதுகாப்பிற்கான அதிகரித்த ஒதுக்கீடு உட்பட மக்களுக்கு மிகவும் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கான, தொடர் நடவடிக்கைகளுக்கு உறுதியளித்துள்ளோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சமூக-பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கும், மீள்குடியேற்றம், வீடளித்தல், இழப்பீடு மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு போன்ற முக்கியமான தேவைகளை நிவர்த்தி செய்வதற்குமான சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனவரி முதலாம் திகதி ஜனாதிபதியால் தொடங்கப்பட்ட, ‘தூய்மையான இலங்கை’ திட்டத்தின் மூலம், அரசாங்கம் ஒரு புதிய அரசியல் கலாசாரத்தையும் தார்மீக மற்றும் நெறிமுறை நிர்வாகத்திற்கான அர்ப்பணிப்பையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

அரசாங்கமானது, ஒருமைப்பாட்டை முன்னுரிமைப்படுத்துவதுடன், தவறான முகாமைத்துவம் மற்றும் ஊழல் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

நமது அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள ஜனநாயகம், சுதந்திரத்தின் அடிப்படையானதும், பழமைவாய்ந்ததுமான கொள்கைகள் மதிக்கப்படுவதுடன், பாதுகாக்கப்படும் அதேவேளை, அனைத்து குடிமக்களின் மனித உரிமைகளையும் பாதுகாக்கும். இந்நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டே, நிர்வாக, அரசியல் மற்றும் தேர்தல் செயன்முறைகள் செயற்படுத்தப்படும்.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை மேலும் முன்னேற்றுவதற்கு தீவிரமானதும், கட்புலனாவதுமான நடவடிக்கைகளை எடுப்பதாக அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

சீராக்கப்பட்ட இலங்கை மற்றும் சமூகங்களுக்கு இடையிலான இடைவெளிகளைக் குறைப்பதற்கான எமது, தொலைநோக்குக்கு ஏற்ப, இலங்கை தினத்தை அறிவிக்க ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார்.

முரண்பாடுகள் தவிர்த்த, ஏனைய எஞ்சியுள்ள சவால்களை எதிர்கொள்ள நிறுவப்பட்ட உள்நாட்டு செயன்முறைகள் சுயாதீனமான மற்றும் நம்பகமான முறையில் தங்கள் பணிகளைத் தொடரும் என்பதை நாம் உறுதி செய்வோம்.

காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம் மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் போன்ற உள்நாட்டு நிறுவனங்கள் மேலும் பலப்படுத்தப்படும். அனைத்து இலங்கையர்களின் நம்பிக்கையையும் பெறும் செயன்முறையொன்றை உறுதி செய்வதற்காக, உண்மை மற்றும் நல்லிணக்கக் கட்டமைப்பின் வரையறைகள், பங்குதாரர்களின் சாத்தியமான மிகப்பரந்த பிரிவினருடன் மேலும் விவாதிக்கப்படும்.

மக்களின் ஆணையுடன், நீதியானதும், நியாயமானதும் மற்றும் வளமானதுமான சமூகத்திற்கான அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான பொறுப்பை அரசாங்கம் முழுமையாக அறிந்திருக்கிறது. தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கி நாம் பாடுபடும்போது, சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான ஊக்கமளித்தலும், ஆதரவும் முக்கியமானதாக இருக்கும்.

இலங்கையானது, ஐக்கிய நாடுகள் சபையின் தீவிர உறுப்பினராகவும், அனைத்து முக்கிய மனித உரிமை தொடர்பிலான ஆவணங்களிலும் தரபோன்றாகவும் உள்ளது. ஒப்பந்த அமைப்புகள் மற்றும் சிறப்பு நடைமுறைகளுடன் நாங்கள் தொடர்ந்து ஈடுபாட்டுடன் செயற்படுகிறோம்” என தெரித்துள்ளார்.

# “இலங்கை மக்களுக்கு தொடர்ந்து ஜப்பான் ஒத்துழைப்பை வழங்கும்”

இலங்கை மக்களைக் கருத்தில் கொண்டு ஜப்பான் தொடர்ந்து ஒத்துழைப்பை வழங்கும்.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்புக்கொண்ட சீர்திருத்தங்கள் நிலையான முறையில் செயல்படுத்தப்ப டுவதையும், முழுமையான பொருளாதார வளர்ச்சிக்கான பாதையில் முன்னேற்றத்தையும் ஜப்பான் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, ஜப்பான் இலங்கைக்கு நீண்டகாலமாக அளித்து வரும் ஆதரவிற்கும், அரசியல், பொருளாதாரம் மற்றும் மக்களிடையேயான பரிமாற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான தனது விருப்பத்திற்கும் வெளியுறவு அமைச்சர் ஹேரத் நன்றி தெரிவித்துள்ளார்.

# “ஆயுதம் காட்ட அழைத்து செல்வார்களோ”

கைது செய்து சிறையிலடைப்பதற்கு எடுக்கும் முயற்சியை, நீதிமன்ற நாட்களில் நீதிமன்றங்களுக்கு வரும் நபர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

கடந்த 2013ஆம் ஆண்டு ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் செய்த எயார் பஸ் விமான கொள்முதல் ஒப்பந்தம் தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காகவே பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியுள்ளார்.

2013ஆம் ஆண்டில், ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் 10 எயார் பஸ்களை வாங்குவதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்த பரிவர்த்தனை தொடர்பாக 16.84 மில்லியன் ரூபாய் அமெரிக்க டொலர்கள் இலஞ்சம் கொடுக்கப்பட்டிருந்ததாக இங்கிலாந்தின் தீவிர மோசடி அலுவலகம் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது.

அப்போது நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்த கபில சந்திரசேனவின் மனைவிக்கு சொந்தமான புருனே கணக்கில் 2 மில்லியன் டொலர்கள் வைப்புச் செய்யப்பட்டிருப்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், சம்பந்தப்பட்ட கணக்கிலிருந்து வேறு கணக்குகளுக்கு பணம் மாற்றப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

இந்தப் பின்னணியில்தான், சம்பந்தப்பட்ட பரிவர்த்தனை தொடர்பாக கடந்த காலங்களில் நீதிமன்ற நடவடிக்கைகள், கைதுகள் மற்றும் பிணை உத்தரவுகள் இருந்ததால், நாமல் ராஜபக்ஷ புதன்கிழமை (26)அன்று மீண்டும் குற்றப் புலனாய்வுத் துறைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

# “வரி முறையை செயல்படுத்த வேண்டும்”

வரி முன்மொழியப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

சேவைகள் ஏற்றுமதி வரி செயல்படுத்தப்படாவிட்டால், மக்கள் இன்னும் கடுமையான வரியை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருப்பார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

அத்துடன், “உங்களுக்குத் தெரியும், அரசாங்க வருவாயை அதிகரிக்க பொதுமக்களுக்கு மேலும் சுமை இல்லாமல் வரையறுக்கப்பட்ட வரி முறையை நாங்கள் செயல்படுத்த வேண்டும். இந்த விஷயத்தில் நிதி அமைச்சகத்தால் ஏதேனும் சலுகை வழங்க முடியுமா என்று நாங்கள் ஆராய்வோம்,” என்று அவர் மேலும் கூறினார்.

அரசாங்கத்தின் 2025 வரவு-செலவுத் திட்டம், வெளிநாட்டுக் கட்சிகளுக்கு சேவைகளை வழங்கி அந்நியச் செலாவணியை மீண்டும் கொண்டு வரும் இலங்கையில் உள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு 15 சதவீத சேவைகள் ஏற்றுமதி வரியை 2025 ஏப்ரல் 01 முதல் அமல்படுத்த உள்ளதாக கூறப்படுகிறது.

BDO இலங்கையின் வரி சேவைகள் தலைவரின் கூற்றுப்படி, இலங்கையில் வசிக்கும் வெளிநாட்டுக் கட்சிகளுக்கு IT வேலை செய்து டாலர்களில் சம்பாதிக்கும் ஃப்ரீலான்ஸர்களும் இந்த வகையின் கீழ் வருவார்கள் என்றார்.

# 5 வருடங்களுக்கு பிறகு நாட்டுக்கு வந்த வாகனங்கள்

வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் கூற்றுப்படி, புதிய விதிமுறைகளின் கீழ் இறக்குமதி செய்யப்படும் உள்ளூர் சந்தையில் 24.5 மில்லியன் ரூபாய் முதல் 26 மில்லியன் ரூபாய் வரை விலை நிர்ணயம் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனவரி 31, 2025 திகதியிட்ட 2421/44 என்ற வர்த்தமானி அறிவிப்பு மூலம், 2020ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து நடைமுறையில் இருந்த வாகன இறக்குமதி மீதான தற்காலிக இடைநீக்கத்தை இலங்கை அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக நீக்கியது.

கோவிட்-19 தொற்று நோயால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக 2021ஆம் ஆண்டில் வாகன இறக்குமதியை நிறுத்த அப்போதைய இலங்கை அரசாங்கம் முடிவு செய்திருந்தது.

கடுமையான பொருளாதார நெருக்கடி தொடர்ந்து நீடித்ததால், வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை மேலும் தொடர அதிகாரிகள் முடிவு செய்தனர்.

இதற்கிடையில், ஜூன் 2024இல், நிதி அமைச்சகம் 2025ஆம் ஆண்டுக்குள் கட்டுப்பாடுகளை படிப்படியாக நீக்கும் திட்டத்தை அறிவித்தது.

பெப்ரவரி 1, 2025 முதல் அமுலுக்கு வரும் புதிய விதிமுறைகள், பல்வேறு வகையான வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கின்றன. அவற்றுள், தனிப்பட்ட பயன்பாட்டிற்கான கார்கள் மற்றும் வேன்கள், பொது பயணிகள் போக்குவரத்திற்கான பேருந்துகள், சரக்கு போக்குவரத்து வாகனங்கள், சிறப்பு நோக்க வாகனங்கள், முச்சக்கர வண்டிகள், மிதிவண்டிகள் மற்றும் பிற மோட்டார் அல்லாத வாகனங்கள் ஆகும்.

# “நாட்டை மீட்டெடுக்க ஒத்துழைப்பு தாருங்கள்”

தற்போதைய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு- செலவுத் திட்டம் குறித்தும், எதிர்காலத்தில் காலத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர், உயர்ஸ்தானிகருக்கு தெளிவூட்டியுள்ளார். அத்துடன், தற்போதைய வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்கத் தேவையான ஒத்துழைப்பை தொடர்ந்து பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இலங்கைக்கு 1.3 பில்லியன் டொலர் வருமானம்

இதற்கமைய, இந்த வருடத்தின் முதலாம் மாதத்தில் பொருட்கள் மற்றும் சேவைகள் உள்ளிட்ட மொத்த ஏற்றுமதி வருமானம் 1334.19 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவானதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

# செவ்வந்தி வழக்கில் இருவருக்கு விளக்கமறியல்

திட்டமிட்ட குற்றத் தலைவர் கணேமுல்லே சஞ்சீவவின் கொலைக்குப் பின்னணியில் உள்ளதாகக் கருதப்படும் இஷாரா செவ்வந்தியின் தாய் மற்றும் சகோதரனை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் புதன்கிழமை (26) உத்தரவிட்டுள்ளார்.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் இந்த இரண்டு சந்தேக நபர்களும் கொலைக்கு உதவியதாகவும், உடந்தையாகவும் இருந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்–சிங்கள புத்தாண்டு காலத்தில் மக்களுக்கு மகிழ்ச்சியான தகவல்

எதிர்வரும் தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொதியொன்றை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.



உணவு பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக விவசாய கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த மற்றும் வர்த்தகம், வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் உணவுக் கொள்கை மற்றும் உணவு பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் மூன்றாவது முறையாக பாராளுமன்ற வளாகத்தில் கூடியபோது, இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

சிங்கள, தமிழ் புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது மற்றும் அந்தப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்பன குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் பண்டிகைக் காலத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மானிய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்க ஒரு பில்லியன் ரூபா ஒதுக்க முன்மொழியப்பட்டுள்ளதோடு இது குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்ற இறக்கங்களை குறைந்தபட்ச அளவில் பராமரிப்பது மற்றும் பேக்கரி பொருட்களின் விலைகளைக் குறைப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நெல் கொள்முதல் குறித்தும் இங்கு ஆராயப்பட்டதோடு நெல் கொள்வனவு செய்வதற்காக அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் கடன் வசதிகளின் கீழ் வாங்கப்படும் நெல்லின் அளவைக் கண்காணிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. சில நெல் ஆலை உரிமையாளர்கள் நெல் வாங்குவதற்காக பெற்ற கடன்களை வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதாக தகவல் கிடைத்துள்ளதோடு இது குறித்து ஆராய்வதற்கு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

பாரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் நெல் வாங்குவதற்காக 15 பில்லியன் ரூபாய்க்கு மேல் வங்கிக் கடன்களைப் பெற்றுள்ளதாகத் இங்கு தகவல் வெளியானது.

எனவே, இந்த ஆண்டு 250,000 மெட்ரிக் டொன் நெல் கொள்வனவு செய்ய அரசாங்கம் எதிர்பார்ப்பதோடு சிறு நெல் ஆலை உரிமையாளர்கள் நெல் கொள்வனவு செய்வதை ஊக்குவிப்பது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. மீண்டும் அரிசி பற்றாக்குறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுமாறும் இதன்போது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மானிய விலையில் நுகர்வோருக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்காக கூட்டுறவு மற்றும் சதோச வலையமைப்பை விரிவுபடுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. விலைக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதன் மூலம் நுகர்வோருக்கு உகந்த சந்தையை உருவாக்குவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

பிரதமரின் செயலாளர் ஜி.பி. சபுதந்த்ரி, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார உள்ளிட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் அடங்கிய உணவுக் கொள்கை மற்றும் உணவு பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## நாட்டில் வறுமை ஒழிப்பிற்காக

# 'பிரஜா சக்தி' திட்டம் நடைமுறை

வறுமை ஒழிப்பிற்காக பல்வித அணுகுமுறைகளுடன் கூடிய ஒருங்கிணைந்த 'பிரஜா சக்தி' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (25) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

தற்போது இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகையில் 06 பேரில் ஒருவர் பல்பரிமாண வறுமைக்குட்பட்டதாக இருப்பதுடன், குறித்த சனத்தொகையில் 95.3% வீதமானவர்கள் கிராமிய மற்றும் பெருந்தோட்டங்களில் வாழ்கின்றனர்.

இலங்கையில் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட வறுமையொழிப்பு



வேலைத்திட்டங்களின் இறுதிப் பெறுபேறுகள் பற்றி எந்தவொரு தரப்பினரும் திருப்தியடையவில்லை என்பதைக் கருத்துக்கள் மூலம் காணக்கூடியதாகவுள்ளது.

கடந்த பல தசாப்தங்களாக வறுமையொழிப்பு நலனோம்புகை வேலைத்திட்டங்கள் மூலம் நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கையும், அதற்காக செலவிடப்பட்டுள்ள நிதியும் படிப்படியாக அதிகரித்துள்ளது.

2000ஆம் ஆண்டில் 1.10 மில்லியன் பயனாளிகளும், 2010ஆம் ஆண்டில் 1.57 மில்லியன் பயனாளிகளாக அதிகரித்துள்ளது. 2024ஆம் ஆண்டில் 1.79 மில்லியன் பயனாளிகள் வரை அதிகரித்துள்ளது.

இந்நிலைமையை தொடர்ச்சியாகப் பேணிச் செல்வது நாட்டின் பொருளாதாரம் மற்றும் உற்பத்திச் செயன்முறைக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

அதனால், இடர்களுக்கு உள்ளாகக்கூடிய குழுவினரை மாத்திரம் முறைசார்ந்த சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தில் உள்வாங்குவதற்கும், ஏனையவர்களை பொருளாதாரச் செயன்முறையில் முனைப்பான பங்காளர்களாக மாற்றுவதற்கும் படிப்படியாக முறையாகத் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டியுள்ளது.

அதற்கிணங்க, புதிய அரசின் கொள்கைக்கமைய 'வளமான நாடு - செழிப்பான வாழ்க்கை' எனும் தொலைநோக்கை வெற்றியடையச் செய்வதற்கு இயலுமாகும் வகையில் பல்வித அணுகுமமுறைகளுடன் கூடிய ஒருங்கிணைந்த வேலைத்திட்டமாக 'பிரஜா சக்தி' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெளிவுபடுத்தியுள்ளார்.







## மகா-சிவராத்திரி நிகழ்வு

எஸ்.ஆர்.லெம்பேட்

வரலாற்றுப் புகழ் பெற்ற, நாயன்மார்கள் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் 2025ஆம் ஆண்டுக்கான மகா சிவராத்திரி நிகழ்வு புதன்கிழமை(25) அன்று இடம்பெற்ற நிலையில், உலகம் முழுவதும் இருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தங்கள் நேர்த்திக் கடன்களைச் செலுத்தி வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

மேலும், சிவ பக்தர்கள் மன்னார் பாலாவியில் நீராடி பாலாவி தீர்த்த நீரை திருக்கேதீஸ்வர ஆலயத்தில் உள்ள மகா சிவலிங்கத்திற்கு நீர் வார்த்து நெய் விளக்கு ஏற்றி வேண்டுதல்கள் மற்றும் நேர்த்திக்கடனைச் செலுத்தியுள்ளனர்.















## உயிர் கோழிகளை வெட்டியவருக்கு எதிராக வழக்கு

மு.இராமச்சந்திரன்

பிரதான வீதியோரத்தில் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும் வகையில் இறைச்சிக்காக உயிர் கோழிகளை வெட்டி துப்புரவு செய்து கொண்டிருந்த நபருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஹட்டன்- டிக்கோயா நகரசபை பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

ஹட்டன் -டிக்கோயா தரவளை பிரதான வீதியில் கோழிகள், இறைச்சிக்காக வெட்டி துப்புரவு செய்வதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உடனடியாக அவ்விடத்திலிருந்து கோழிகளை அகற்ற நடவடிக்கை எடுத்தனர்.

பொது இடத்தில் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தியமைக்கு எதிராக-வழக்கு-பதிவு செய்து எதிர்வரும் 28 ஆம் திகதி ஹட்டன் மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் ஹட்டன்- டிக்கோயா நகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

## காலாவதியான குளிர்பானங்களை வைத்திருந்தவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி பகுதியில் விற்பனைக்காக காலாவதியான குளிர்பானங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவருக்கு 30 ஆயிரம் ரூபாய் அபராம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தபகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் அண்மையில் பொது சுகாதார பரிசோதகர்கள் குழு திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.



இதன்போது, வர்த்தக நிலையம் ஒன்றில் காலாவதியான குளிர்பானங்களை விற்பனைக்காக காட்சிப்படுத்தியிருந்த வர்த்தகர் ஒருவர் கண்டறியப்பட்டு, அவருக்கு எதிராக யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைகளை நேற்று செவ்வாய்க்கிழமை(26) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வர்த்தகர் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து, அவரை கடுமையாக எச்சரித்த யாழ். நீதிமன்று, 30 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்த உத்தரவிட்டுள்ளது.

## 'கெஹெல்பத்தர பத்மே'வின் நண்பன் மீது துப்பாக்கிச் சூடு

மினுவாங்கொடை - பத்தடுகொட சந்தியில் புதன்கிழமை (26) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பத்தன்டுவன பிரதேசத்திற்குச் சென்ற இனந்தெரியாத நபரொருவர், மோட்டார் சைக்கிளில் வந்து, முச்சக்கர வண்டியில் இருந்த 36 வயதுடைய நபர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் பாதாள உலக கும்பலைச் சேர்ந்த



'கெஹெல்பத்தர பத்மே' என்று அழைக்கப்படும் மன்தினு பத்மசிறி பெரேரா ஹேவத் என்பவரின் நெருங்கிய நண்பன் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளனர்.

## 5 உணவகங்களுக்கு எதிராக வழக்கு

பாறுக் ஷிஹான்



நோன்பு காலத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீனின் நெறிப்படுத்தலில் செவ்வாய்க்கிழமை(25) பாரிய உணவுப் பரிசோதனை நடவடிக்கை சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த நடவடிக்கையின் போது சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே.மதன் தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவு பண்டங்கள் மற்றும் பொருட்களை சுகாதாரத்துக்கு முறைகேடான வகையில் தயாரித்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட வர்த்தக நிலையங்கள் உள்ளிட்டவைகள் சோதனை மேற்கொள்ளப்பட்டு பாவனைக்கு உதவாத பொருட்கள் அங்கிருந்து கைப்பற்றப்பட்டன. பின்னர் குறித்த சோதனையில் இனங்காணப்பட்ட 5 உணவக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான விடயங்களை சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


## மோட்டார் சைக்கிள் ஓட்டப்பந்தயம்; பொலிஸ்துறைக்கு இரண்டாம் இடம்

Southern motro sports club இனால் 29ஆவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட 2025 Southern Eliyakanda Totachi hill climb race தொடர், சனிக்கிழமை(22) மற்றும் ஞாயிற்றுக்கிழமை (23) ஆகிய தினங்களில் மாத்தறை எலியகந்த ரேஸ் கோர்ஸில் நடைபெற்றது.

பல்வேறு நிகழ்வுகளின் கீழ் இந்தப் போட்டியில் தேசிய அளவிலான வீரர்கள் சமார் 110பேர் பங்கேற்றனர், அவர்களில் 05 வீரர்கள் இலங்கை பொலிஸ்துறையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றதுடன், அதில் பொலிஸ் கான்ஸ்டபிள் 94048 பி.எஸ்.லக்மால் Supper motored motorcycle 250cc open போட்டியில் இரண்டாம் இடத்தை வென்றுள்ளார்.

பொலிஸ் மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் குழுவின் தலைவராகத் துணை பொலிஸ் அதிகாரி நாலக டி சில்வா பணியாற்றியுள்ளதுடன், மூத்த பொலிஸ் அதிகாரி மயூர பெரேரா செயலாளராகப் பணியாற்றியுள்ளார். பொலிஸ் கான்ஸ்டபிள் 77800 திலான் ரத்நாயக்க பயிற்சியாளராக பணியாற்றியதோடு, பொலிஸ் அதிகாரி மனோஜ் மீமனகே மேலாளராகப் பணியாற்றியுள்ளார்.





# நெருப்பால் எரிக்க முடியும்; எதையும் கட்டுப்படுத்த முடியாது

நமது நாட்டில் ஒவ்வொரு வருடமும் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் வெப்பமான காலநிலை நிலவும். இதனால், காட்டுத்தீ பரவும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வாண்டும் காட்டுத்தீ ஆங்காங்கே பற்றி எரிந்துகொண்டிருக்கின்றது. இதனால், இலங்கையின் பல காடுகள் விறகுகளாக மாறிவிட்டன,

அவ்வாறான காடுகளில் ஏற்படும் ஒரு சிறிய தீ கூட தீயை ஏற்படுத்தும். இந்த நிலைமை பொதுவாக மலைகளில் அமைந்துள்ள வன இருப்புக்களில் மிகவும் கடுமையாகக் காணப்படுகிறது. கடந்த இரண்டு மாதங்களில், இலங்கையில் உள்ள பல வனப்பகுதிகளில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில், அரசாங்கம் காட்டுத்தீ கட்டுப்பாட்டு வாரத்தையும் அறிவித்தது.

காட்டுத்தீ பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், காட்டுத்தீக்கான மூலங்களை அகற்றுதல் மற்றும் காட்டுத்தீ ஏற்படும் போது அவற்றைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை இந்த கட்டுப்பாட்டு வாரம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தீ விபத்துக்கள் தன்னிச்சையாக ஏற்படுகின்றன. அல்லது, ஒரு தீக்குச்சியைக் கொளுத்தி வறண்ட காட்டில் வீசுவதன் மூலம், காட்டுத்தீயை ஏற்படுத்தலாம். இந்த இரண்டாவது செயலைச் செய்யும் முட்டாள்கள் ஏராளம். இந்த முட்டாள்களின் வேடிக்கை என்னவென்றால், காடு எரிவதைப் பார்த்து வேடிக்கை பார்ப்பதுதான். இல்லையெனில், அது நெருப்பில் இறக்கும் காட்டு விலங்குகளின் சதையை உண்பது.

மேலே குறிப்பிட்ட முட்டாள்களுக்குக் காட்டு விலங்குகளைச் சுற்றி வளைத்து காடுகளுக்குத் தீ வைப்பது எப்படி என்று தெரியும். இந்தப் பாவச் செயலைச் செய்பவர்கள் கைது செய்யப்பட்டு கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், காடுகளை எரிப்பது தேசத்துரோகச் செயலாகக் கருதப்பட்டது. இதற்குக் காரணம், அந்த ஆங்கிலேயர் சுற்றுச்சூழலை நேசிப்பதால் அல்ல. காட்டில் தீப்பிடித்து தேயிலைத் தோட்டம் அல்லது இலவங்கப்பட்டை தோட்டத்திற்கும் பரவும் வாய்ப்பு இருந்தது.

ஆங்கிலேயரின் கட்டளைப்படி, தேயிலை அல்லது இலவங்கப்பட்டையை அழிப்பது தேசத்துரோகச் செயலாகும். இதன் காரணமாக, காட்டில் தீ வைப்பவர்கள் பிடிக்கப்பட்டு, வரிசையாக நிறுத்தப்பட்டு, சுடப்பட்டனர். இந்த நாடு அவ்வளவு மோசமாக இல்லை, ஏனெனில் அது நாகரிகத்தில் நீண்ட தூரம் வந்துவிட்டதால். எனவே, காடுகளில் தீ வைப்பவர்களைச் சுடுவதற்குப் பதிலாக, அந்த முட்டாள்களை சிறையில் அடைத்து, சில வருடங்கள் தென்னை நார் அரைக்க அனுமதிக்க வேண்டும்.

ஒரு காடு வளர பலநூறு ஆண்டுகள் ஆகும். சிங்கராஜா வனம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழைமையானது. ஒரு காடு எரிந்து சாம்பலாவதற்கு சில கணங்கள் மட்டுமே ஆகும். இல்லையென்றால், அது ஒரு சில நிமிடங்கள் தான். அது அதன் முந்தைய காடுகளின் நிலைக்குத் திரும்பக் குறைந்தது 300 முதல் 400 ஆண்டுகள் ஆகும். நெருப்பு மட்டுமே எரிய முடியும். நெருப்பால் எதையும் கட்டுப்படுத்த முடியாது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அத்துடன், காட்டுத்தீ கட்டுப்பாட்டு வாரத்தில், காடுகளுக்கு தீ வைத்தால் எவ்வாறான தண்டனைகளை அனுபவிக்க வேண்டிவரும் என்பதையும் அறிவுறுத்த வேண்டும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## தேசிய பாதுகாப்பை எப்படி உறுதிப்படுத்த முடியும்?

முருகானந்தம் தவம்

அனுரகுமார 'சகோதரர்கள்' நடத்தும் திசைக்காட்டியின் ஆட்சியில் அண்மைய நாட்களாக அதிகரித்து வரும் பாதாளக் குழுக்களிடையிலான பழிவாங்கும் வேட்டைகளினால் கடந்த ஒரு வாரத்திற்குள் மட்டும் 8க்கும் மேற்பட்ட உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ள நிலையில், முழு நாடும் மக்களும் அதிர்ச்சியிலும் அச்சத்திலும் உறைந்து போயுள்ளனர். நாட்டின் பாதுகாப்பும் மக்களின் பாதுகாப்பும் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியில் டிரான் அலஸ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது, முன்னெடுக்கப்பட்ட பாதாளக்குழுக்களுக்கு எதிரான 'யுக்திய' நடவடிக்கையினால் பாதாள குழுக்களின் தலைவர்கள் பலர் நாட்டை விட்டுத் தப்பியோடியும் அதன் உறுப்பினர்கள் தமது பாதாள வேலைகளைக் கை விட்டு துண்டைக் காணோம் துணியைக் காணோம் என ஓடித் தலைமறைவாகியிருந்தனர். 'யுக்திய' நடவடிக்கையினால் பாதாளக் குழுக்கள் 'கிளீன்' செய்யப்பட்டன.

ஆனால், அப்போது பாதாளக் குழுக்களுக்கு எதிரான ரணில் விக்ரமசிங்க அரசின் 'யுக்திய' நடவடிக்கையைக் கடுமையாக எதிர்த்தவர்களில் தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி.) தேசிய மக்கள் சக்தியும் முதன்மையானவர்களாக இருந்தார்கள். மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் 'யுக்திய' என்ற பெயரில் அப்பாவிகள் பழிவாங்கப்படுவதாகவும் கொல்லப்படுவதாகவும் சிறைகளில் அடைக்கப்படுவதாகவும் கூக்குரலிட்டார்கள். ஆனால், பொதுமக்கள் மத்தியில் 'யுக்திய'வுக்கு பேராதரவு இருந்தது.

இவ்வாறான நிலையில், நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றோம், மக்களுக்கும் நாட்டுக்கும் புதிய திசையைக் காட்டப்போகின்றோம் என்று தீவிர பிரசாரங்களை முன்னெடுத்து மக்களுக்கு நம்பிக்கையூட்டி நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அனுரகுமாரவும் சகோதரர்களும் அரியணை ஏறினர். அவர்கள் கூறியது போல, நாட்டின் 'மாற்றம்' ஏற்பட்டது. ஆனால், அந்த 'மாற்றம்' அவர்கள் கூறிய மக்களுக்கான மாற்றமாகவன்றி, மக்களைக் கொல்லும், மக்களை வதைக்கும், மக்களை ஏமாற்றும் மாற்றமாகவே அது உள்ளது.

நாட்டில் அரிசித் தட்டுப்பாடு, தேங்காய்த் தட்டுப்பாடு, அத்திவாசியப் பொருட்களின் ஏறிய விலைகள் குறையாமை, உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு என மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை அதிகரித்து வந்த அனுரகுமார அரசு ரணில் ஆட்சியில் காணாமல் போயிருந்த பாதாளக் குழுக்களையும் தற்போது கட்டவிழ்த்து விட்டு நீதிமன்றத்தின் சாட்சி கூண்டுக்குள், நீதிமன்றத்தின் வாசலில் படுகொலைகளைச் செய்யுமளவுக்குப் பாதாளக் குழுக்களுக்குச் சுதந்திரத்தை , தைரியத்தை வழங்கியுள்ளது. பாதாளக் குழுக்கள் சுதந்திரமாக நடமாடி நடத்தும் கொலை வெறியாட்டத்தினால் கடந்த ஒரு வாரத்தினுள் மட்டும் 8 பேர் வரையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பாதாளக் குழுக்கள் மீண்டும் தலைதூக்கி நடத்தும் கொலை வெறியாட்டத்தினால் நாட்டின் பாதுகாப்பு பேராபத்துக்குள் சிக்கியுள்ளதாக எதிர்க்கட்சிகள் குரல் எழுப்புகின்ற நிலையில், "இது பாதாளக் குழுக்களிடையில் நடக்கும் மோதல். இதனால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை" என அனுரகுமார அரசு கூறுகின்றது. எதிர்க்கட்சிகளுக்கு வேறு விடயங்கள் இல்லாததால் இதனைத் தூக்கிப் பிடிப்பதாகவும் குற்றம் சாட்டுகின்றது.

கடந்த ஒரு வாரத்தில் பாதாளக் குழுக்களினால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 8 பேரில் இரு குழந்தைகள், ஒரு அப்பாவித் தமிழ் இளைஞனும் அடக்கம். படுகொலை செய்யப்பட்ட இரு குழந்தைகளும் பாதாளக் குழு உறுப்பினர்களாக இருக்க முடியாது. அதேவேளை, கொட்டாஞ்சேனையில் கடைக்குள் வைத்து சுட்டுக் படுகொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞன், எந்த வித குற்றச் செயல்களிலும் ஈடுபடாதவர் என பொலிஸ் தரப்பே உறுதிப்படுத்தியுள்ளது. இதன்மூலம் பாதாளக் குழுக்களினால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்றாலும், மக்களின் பாதுகாப்புக்கும் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதே. இதற்கு அனுரகுமார அரசு என்ன கூறப்போகின்றது?

இந்த ஆண்டு மட்டும் 17 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகப் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார். இதேவேளை, குறித்த சம்பவங்களில் பொலிஸார் மற்றும் முப்படைகளில் உள்ளவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபட்டுள்ளதாகவும், அதன்படி, அவ்வாறானவர்களில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். அதுமட்டுமல்ல இலங்கையில் 58 பாதாள குழுக்கள் செயல்படுகின்றன. அந்த குற்ற வலையமைப்புக்குள் 1,400 பேர்வரை இடம்பெற்றுள்ளனர் என்று பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மேலும் தெரிவித்துள்ளார். வெளிநாடுகளில் இருந்தே பாதாள குழுக்களை வழிநடத்துகின்றனர் என்கிறார்.

பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மட்டுமல்ல, பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யகொந்தாவும் பொருளாதார நெருக்கடி மற்றும் போதைப்பொருள் பழக்கம் காரணமாக இராணுவ வீரர்கள் பாதாளக்குழுக்களுடன் தொடர்பில் இருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகக் கூறுகின்றார். அத்துடன், சட்டவிரோதமாக இராணுவத்தை விட்டு வெளியேறும் பல நபர்கள் பாதாள உலக குழுக்களுடன் தொடர்பு கொள்ளும் போக்கு அதிகரித்து வருவதாகவும் அவர் உறுதிப்படுத்துகின்றார். இதேவேளை, பாதுகாப்புப்படைகளிலிருந்து விடுமுறையில் வந்து ஒப்பந்தக் கொலைகளைச் செய்து விட்டு மீண்டும் பணிக்குத் திரும்பும் பாதுகாப்புப் படையினர் பலர் இருப்பதாக எதிர்க்கட்சிகளும் குற்றம் சாட்டுகின்றன. அவ்வாறானால், பாதுகாப்புப் படைகளில் உள்ளவர்களே பாதாள உலகக் குற்றங்களில் ஈடுபடுவது நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லையா? பணத்துக்காகப் படுகொலை செய்யும் இவ்வாறான பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்தவர்களை வெளிநாடுகளில் இருந்தே வழி நடத்துகின்றார்கள் என்றால் வெளிநாடுகளின் பணத்துக்காகப் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த இவ்வாறானவர்கள் நாட்டைக் காட்டிக்கொடுக்க மாட்டார்கள் என்பதற்கான உத்தரவாதம் அனுரகுமார அரசிடம் உள்ளதா?

திட்டமிட்ட குற்றச் செயல்களின் தலைவர் கணேமுல்ல சஞ்சீவ கம்பஹா நீதிமன்றத்திற்குள் சுட்டுக் கொல்லப்படுவார் என்ற தகவல் முன்னர் கிடைத்திருந்ததாகப் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவிக்கின்றார். புதுக்கடை நீதிமன்றத்தினுள் படுகொலை செய்யப்படும் சம்பவத்திற்கு முன்னர், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் தலைவர் கணே முல்லா சஞ்சீவவை படுகொலை செய்ய முயற்சிப்பது குறித்து தகவல் கிடைத்ததாகவும் அதன்படி, புதுக் கடை நீதிமன்ற வளாகத்தில் துப்பாக்கிச் சூடு நடப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு கணேமுல்ல சஞ்சீவவை கம்பஹா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த திட்டமிடப்பட்டிருந்ததாகவும், ஆனால், அவருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், கம்பஹா பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்குத் தகவல் அளித்து, கணேமுல்ல சஞ்சீவவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல் சாட்சியங்களின் தொழில்நுட்ப பரிசோதனையை நடத்துமாறு நீதவானிடம் தெரிவித்ததாகவும் பதில் பொலிஸ் மா அதிபர், பிரியந்த வீரசூரிய மேலும் தெரிவிக்கின்றார்.

கணேமுல்ல சஞ்சீவவை நீதிமன்றத்தினுள் வைத்து படுகொலை செய்யப்போகும் திட்டத்தை முன்கூட்டியே அறிந்திருந்தும் அவரது உயிரை பொலிஸாரால் பாதுகாக்க முடியவில்லை. மித்தெனியாவில் வைத்து அருண விதானகமகே என்பவரும் அவரது இரு குழந்தைகளும் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். கொல்லப்பட்ட அருண விதானகமகே 'அரகலய' ஆர்ப்பாட்டத்தில் இரு நபர்களைக் கொலை செய்தவர் என்றும் ராஜபக்ஷக்களின் கொலைக் கருவி அவர் என்றும் அவர் பல கொலைகளுடன் தொடர்புபட்டவர் என்றும் தகவல்கள் உள்ளன.

இவ்வாறான நிலையில், தான் பலதகவல்களை வெளியிட்டுள்ளதால் தனது உயிருக்கு ராஜபக்ஷக்களினால் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தான் எந்த வேளையிலும் கொல்லப்படலாம் , ஏன் நாளைக்குக் கூட கொல்லப்படலாம் என இந்த அருண விதானகமகே ஊடகமொன்றுக்குப் பேட்டியளித்த சில நாட்களுக்குள்ளேயே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். ஆக, கணேமுல்ல சஞ்சீவவை நீதிமன்றத்தினுள் வைத்து படுகொலை செய்யப்போகும் திட்டத்தை முன்கூட்டியே அறிந்திருந்தும், அவரது உயிரை பொலிஸாரால் பாதுகாக்க முடியாத, அருண விதானகமகே தான் எவ்வேளையிலும் கொல்லப்படலாம் என கூறியிருந்தும், ராஜபக்ஷக்களின் குற்றங்களின் முக்கிய சாட்சியான அவரது உயிரைப் பாதுகாக்க முடியாத பொலிஸாராலும், அனுரகுமார அரசின் பாதுகாப்பு அமைச்சினாலும் எவ்வாறு நாட்டின் தேசியப் பாதுகாப்பையும் மக்களின் உயிர் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த முடியும்?

கணேமுல்ல சஞ்சீவவை நீதிமன்றத்தினுள் வைத்து படுகொலை செய்யும் திட்டத்தை வழி நடத்திய 25 வயதுடைய இஷாரா செவ்வந்தி எனும் பெண்ணை அனுரகுமார அரசின் பாதுகாப்புப்படைகள் இத்தனை நாட்களாகத் தேடி வருகின்றன. அந்தப் பெண்ணின் புகைப்படங்களை மட்டும் தான் இவர்களினால் கண்டுபிடித்து வெளியிட முடிகின்றதே தவிர, தைரியமாக, நேரடியாக புதுக்கடை நீதிமன்றத்தினுள்ளே சென்று படுகொலைத் திட்டத்தை வழி நடத்தி தனது முகத்தையும் எந்தவித அச்சமுமின்றி சிசிடிவிக் கெமராக்களுக்கு காட்டிச்சென்ற இஷாரா செவ்வந்தியையே இன்றுவரை கைது செய்ய முடியாத அநுரகுமார அரசின் பாதுகாப்புப் படைகளினால் எப்படி நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்?



## வாழ்வியல் தரிசனம்

குடும்ப உறுப்பினர்களிடையே பொய்களைத் தாராளமாக உபயோகித்தால், அந்தக் குடும்பத்தில் நிம்மதி கிட்டாது. எதையும் ஒளித்து மறைப்பது, வெளிப்படைத் தன்மையின்றிப் பழகினால், அவர்களிடம் உண்மைத் தன்மையே அற்றுப்போய்விடும்.

ஒருவரை ஒருவர் நம்பாமல் நடந்தால், அவர்களிடம் கோபதாபம் தானாகவே வந்துவிடும். குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களும் மனம் விட்டுப் பேசவேண்டும். இதனால் குடும்ப உறவு மேலோங்கும்.

குடும்ப உறவு ஒரு பரம்பரையுடன் முடிவதில்லை. எதிர்காலத்துடன் வளர்ந்து செழிக்க வேண்டிய பந்தங்கள். குடும்ப உறவுகளைச் சிதைக்கக்கூடாது. வீட்டில் உள்ள பிள்ளைகளுடன் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். பொய்களைப் பேசி அவர்களை ஏமாற்றலாகாது.

கல்விகற்றலில் மட்டுமல்ல; ஒழுக்க நெறி, பக்தி மார்க்கம், பெரியோர்களை மதித்து நடத்தல் என்பவை இளமைப் பராயத்திலேயே ஊட்டப்பட வேண்டும்.

குடும்பங்கள் எல்லாம் இணைந்ததே, இந்தப் பரந்த உலகம். தனித்து வாழ்வது அல்ல; பொறுப்பு, நம்பிக்கையுடன் வாழ்க்கையை அமைத்தால், அதுபோல், இன்பம் வேறேது?

நன்றி-பருத்தியூர் பாலா.வயிரவநாதன்

## கடிதங்கள்

### குப்பைகளால் பொது மக்கள் அசௌகரியம்



மகாவலி நதிக்கு நீர் வழங்கும் கால்வாயான ஹட்டன் ஓயாவில், குப்பைகள் கொட்டப்படுவதால், கடுமையான சுற்றுச்சூழல் அழிவு ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹட்டன், மல்லியப்பு சந்தியில் சிலர் வேண்டுமென்றே குறித்த ஓயாவில் குப்பைகளைக் கொட்டுவதாக இந்த சூழ்நிலைகள் குறித்து கருத்து தெரிவித்த சிலர் கூறுகின்றனர்.

இவ்வாறு கால்வாயில் குப்பைகளைக் கொட்டுவதால், அந்த கால்வாயைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சுற்றுச்சூழல் கடுமையாக பாதிக்கபடுவதுடன், இந்தக் கால்வாயின் நீரைப் பயன்படுத்தும் ஹட்டன், மல்லியப்பு சந்தி, ஸ்ட்ராடன், ஷானன், வட்டவளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களின் உடல் நலத்திற்கு பல்வேறு அச்சுறுத்தல்கள் ஏற்படும் அபாயமும் உள்ளது.

இந்த சூழ்நிலைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிகுந்த கவனம் செலுத்தி, இந்தக் கால்வாயில் குப்பைகளைக் கொட்டுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மலை ஏறும் நதிகள்





அன்று மாலை தொடங்கிய கடும் மழை, சில மணித்தியாலங்களாகப் பெய்து ஓய்ந்த பின்னர், தொடர்ந்தும் தூறிக்கொண்டு இருக்கிறது. குளிர் காற்றும் விட்டு விட்டு வீசிக்கொண்டிருக்கிறது. ஊர் உறக்கத்திற்கு ஏற்கெனவே போய்விட்டிருந்தது.

பல நாட்களாக வஸந், ஓய்வில்லாமல் இன்றுவரை வேலைகள் பல செய்ய வேண்டி இருந்தமையால் அவன் மிகக் களைப்படைந்திருந்தான். எனவே, அவன் தனது உறவினர்களையும், நண்பர்களையும் ஒருவாறு வழி அனுப்பி வைத்துவிட்டு தனது படுக்கை அறைக்குச் சென்று அறையின் பிரகாச மின் விளக்கை அணைத்துவிட்டு, பிரகாசமற்ற மென் விளக்கை ஏற்றிவிட்டு, மனைவியின் வரவை எதிர்பார்த்து தன் கட்டிலில் காத்திருக்கிறான்.

வஸந்தின் அறைக் கதவு தட்டப்படும் சத்தத்தைத் தொடர்ந்து தானாகவே கதவைத் திறந்துகொண்டு வஸந்தின் மனைவி 'மது' வஸந்தின் படுக்கை அறைக்குள் நுளைந்து கதவை உட்புறமாகத் தாளிடுவதை வஸந் அவதானித்தான். ஆனால், மதுவின் சினேகிதிகள்தான் வஸந்தின் அறைக் கதவைத் தட்டிய பின்பு திறந்து மதுவை உள்ளே தள்ளி அனுப்பினார்கள் என்பது வஸந்திற்குத் தெரிந்திருக்க நிஞாயமில்லை.

கதவை உட்புறமாகத் தாளிட்ட வஸந்தின் மனைவி மது, வஸந்தின் கட்டிலுக்கு அமைதியாக வந்து கட்டிலில் அமர்ந்து, கீழே நிலத்தைப் பார்த்தபடி மௌனமாக இருந்தாள்.

அன்றுதான் அவர்கள் இருவருக்கும் முதலிரவு. அன்று காலையில்தான் இருவருக்கும் திருமணம் நடந்தேறியது. ஆனாலும் மதுவின் முகத்தில் கல்யாணக் களையையோ அல்லது சந்தோஷமான முகத்தையோ வஸந்தினால் காண முடியவில்லை.

வற்றிய குளம் போல மது 'உம்' என்று ஏதும் பேசாமல் இருந்தது பல எதிர்பார்ப்புகளுடன் காத்திருந்த வஸந்திற்கு சங்கடமாக இருந்தது. அதனால் அவனே மதுவிடம் மெதுவாகப் பேசத் தொடங்கினான்.

மது! இங்கே பாரும். ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்? உடம்பிற்கு ஏதும் சுகமில்யா? என்று கேட்டான். அதற்கு மது 'இல்லை' என்பதுபோல, தலையை ஆட்டிவிட்டு மீண்டும் அமைதியாகவே இருந்தாள். வஸந் மீண்டும் பேசத் தொடங்கினான். மது, நான் இப்ப சொல்வது உமக்கு சினிமாவில் வருவதுபோல தோன்றலாம். ஆனாலும், நான் கூறவேண்டியதை இன்று கூறியே ஆகவேண்டும் என்பதனால் கூறுகிறேன் என்று அவன் தனது பேச்சைத் தொடர்ந்தான். இன்றில் இருந்து எமக்கிடையில் ஏதும் ஒளிவு மறைவுகள் இருக்க வேண்டாம். நாம் இறுதிவரை ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து அன்பாக இருப்போம். உங்கள் குடும்பம் எங்கள் குடும்பத்திலும் பார்க்க மிக வசதியான குடும்பம் என்றாலும், நான் எக் காலத்திலும் எனது சுய கௌரவத்தை விட்டுக்கொடுக்க மாட்டேன். உனக்காக நானும் எனக்காக நீயும் என்று ஒற்றுமையாக வாழ்வோம். ஒருவருடைய சந்தோஷத்தை புரிந்து ஏற்று வாழ்வோம். எங்களுக்கிடையில் என்ன பிரச்சினை என்றாலும் பிரச்சினையிலுள்ள உண்மையை மனம்விட்டு பேசித் தீர்த்துக்கொள்வோம். அப்படி நாம் ஒருவேளை பிரிய வேண்டிய நிலை ஏற்பட்டாலும், பிரச்சினையை மனம் விட்டுப் பேசித் தீர்க்க முயல்வோம். அப்படி தீர்க்க முடியாது போனால், சந்தோஷமாக ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து பிரிந்து செல்வோம். இதுவரையில் எனக்கு யாருடனும் காதல் என்று ஒன்றும் இருந்தது கிடையாது. ஆனால், காதலை நான் எதிர்ப்பவனுமல்ல. இனிமேல்தான் நான் மனைவியாகிய உம்மை காதலிக்க வேண்டும் என்று கூறிச் சிரித்து மதுவின் முகத்தை உற்று நோக்கி அவள் வலதுகையை மெதுவாகப் பிடித்தான்.

இவ்வளவு நேரமும் வஸந் கூறியவற்றை கீழே நிலத்தைப் பார்த்தபடியே கேட்டுக்கொண்டிருந்த மது, வஸந் பிடித்த கையை மெதுவாக உதறிவிட்டு, மெதுவாக விம்மத் தொடங்கினாள். விம்மலைக் கேட்ட வஸந் மதுவின் நாடியை தொட்டு உயர்த்தியபோது அவளது கண்களில் இருந்து நீh வடிவதை அவதானித்தான்.

'ஏன் அழுகிறாய் மது?' என்று வஸந் கேட்டபோது, மது எல்லாவற்றையும் போட்டு உடைத்துவிட்டாள். தான் 'நாதன்' என்பவனை உயிருக்குயிராக காதலித்ததாகவும், பெற்றோர் தன்னை பயமுறுத்தி ஏமாற்றி ஏதோ மயக்க மருந்து தந்து உங்களிற்கு என்னை திருமணம் செய்து வைத்துவிட்டார்கள் என்றும், எப்பொழுது நான் தன்னிடம் வந்தாலும் என்னை நாதன் ஏற்பதாகக் கூறியுள்ளார் என்றும் சிறு குழந்தைபோல் மெதுவாக கூறி அழுதாள்.

அழவேண்டாம் மது. இப்பொழுது அழுவதனால் ஒரு பிரயோசனமும் இல்லை. உமக்கு விருப்பமில்லாமல் நடந்த இத் திருமணத்தை நான் எனக்கு சாதகமாக எடுக்க விரும்பவில்லை. நீ விரும்பியவருடன் செல்ல விரும்பினால் நான் உன்னை நாளையே சேர்த்து வைக்கிறேன் என்றும் கூறி, உமக்கு நாதனுடன் சென்று வாழ பூரண சம்மதமா? என்று கேட்டான். மது தன் தலையை மேலும் கீழுமாக ஆட்டிவிட்டு மீண்டும் விம்மத் தொடங்கினாள். நாதன் இருக்கும் இடத்தைப்பற்றி மதுவிடம் கேட்டபோது, நாதன் வேலை செய்யும் கந்தோர் விலாசம் மட்டும் தன்னிடம் இருப்பதாகவும், ரயிலில் போனால் ஆறு மணித்தியாலத்தில் போய்விடலாம் என்றும் விம்மியவாறு அவள் கூறினாள். சரி மது தயவுசெய்து இப்ப அழ வேண்டாம். இப்ப படுத்துத் தூங்கும். நாளை காலையில் நான் உம்மை நாதனிடம் செல்ல ரயில் ஏற்றிவிடுகிறேன் என்று கூறிவிட்டு, தரையில் ஒரு பாயை விரித்துப்போட்டு, அதில் வஸந் படுத்து உறங்கிவிட்டான்.

மறுநாள் காலை 4.30 மணிக்கு, வீட்டிலுள்ள யாருக்கும் தெரியாமல் ஒரு சூட்கேசில் சில உடுப்புகளுடன் மதுவை தனது காரில் கொண்டுபோய் நாதனிடம் செல்வதற்காக ரயில் ஏற்றிவிட்ட பின் வீட்டிற்கு சென்றபோது ஏனையோர் மதுவைப்பற்றி விசாரிக்க, ராத்திரி மதுவிற்கு அவளின் உற்ற சினேகிதியிடம் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்ததாகவும், அவ் உயிர்ச்சினேகி தன் கணவர் ஒரு விபத்தில் காலமாகிவிட்டார் என்றும், அதனால் சினேகிதி மதுவை உடனடியாக வரும்படி வேதனையுடன் கேட்டதாகவும், அதனால் நான் மதுவை அவளின் சினேகிதியிடம் செல்வதற்காக ரயில் ஏற்றிவிட்டு வருவதாகவும் வஸந் பொய் சொன்னான்.

அன்றைய பகல் பொழுது கழிந்து மாலைக் கதிரவன் வர்ணஜாலம் காட்டி கடலினுள் மறைகின்ற மாலை நேரம். முதல்நாள் நடைபெற்ற திருமணத்திற்கு வர முடியாதவர்கள் சிலர் வஸந்தின் வீட்டிற்கு வருகை தந்திருந்தார்கள். அவர்கள் தாங்கள் கொண்டுவந்திருந்த அன்பளிப்புப் பொருட்களை வஸந்திடம் கொடுத்துவிட்டு, வஸந்தின் மனைவி மதுவைப்பற்றிக் கேட்டபோது, மது தனது மிக நெருங்கிய சினேகிதியின் கணவர் அகால மரணமடைந்ததனால், அச் சினேகிதி உடனடியாக மதுவை தன்னிடம் வரும்படி போனில் மன்றாடிக் கேட்டதனால், மது அச் சினேகிதியிடம் போய்விட்டார் என்று அதே பொய்யைக் மீண்டும் வஸந் கூறினான்.

சிறிது நேரம் வஸந்திடம் உறவினர்கள் கதைத்துவிட்டு, அவர்களுக்கு அளிக்கப்பட்ட இரவு உணவை உண்டபின்னர், எல்லோரும் வஸந்தின் வீட்டின் பின் ஹோலில் தொலைக்காட்சியில் வஸந், மது அவர்களின் திருமண வீடியோ படத்தை பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். கடிகாரம் எட்டு முறை அடித்து ஓய்கிறது. மழை மீண்டும் இடிமின்னலுடனும், காற்றுடனும் பெய்யத் தொடங்கிவிட்டது.

வீட்டின் அழைப்பு மணியைக் கேட்டு வீட்டு வாசலுக்கு சென்று வாசற் கதவைத் திறந்த வஸந்திற்கு அதிர்ச்சி. மழையில் நனைந்தபடியே மது, நிலத்தைப் பாhத்தபடி கொண்டுபோன அதே சூட்கேசுடன் நிற்கிறாள். வஸந் கதவை தனக்கு பின்புறமாக மெதுவாகச் சாத்திக்கொண்டு, வஸந்தும் வீட்டிற்கு வெளியே வந்து, நாதனை நீர் சந்திக்க முடியவில்லையா மது? என்று கேட்டான். வஸந்தை ஒரு முறை நிமிர்ந்து பார்த்த மது மீண்டும் கீழே பார்வையைச் செலுத்தியபடி விம்மத் தொடங்கினாள். என்ன நடந்தது? நீர் நாதனை சந்தித்தீரா இல்லையா? என வஸந் சற்று உரக்கக் கேட்டான். சந்தித்தேன். ஆனால் அவர் என்னை ஏற்ற மறுத்துவிட்டார். நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், அணில் கடித்த பழம் தனக்கு வேண்டாம் என்று....... மது தொடர்வதை இடைமறித்த வஸந், இங்கே பார் மது, மேலே எனக்கு ஒன்றும் சொல்ல வேண்டாம். இதற்கு மேல் நான் கேட்பதும் முறையல்ல. நீர் சொல்வதும் அழகல்ல. இதைப்பற்றி எமது வாழ்க்கையில் உம்மை நான் ஒருபோதும் கேட்க மாட்டேன். என்னை நம்பி நீ திரும்பி என்னிடம் வந்துவிட்டாய் பார் மது, அதுவே எனக்குப் போதும். நீர் உமது மிக நெருங்கிய சினேகிதியின் கணவர் அகால மரணமடைந்ததனால் சினேகிதி அவசரமாக வரும்படி போனில் கேட்டு, சினேகிதியிடம் சென்றுள்ளாய் என்று வீட்டாருக்கு நான் பொய் கூறி உள்ளேன். சில சொந்தக்காரர்களும், சினேகிதர்களும் வீட்டின் பின் ஹோலில் தொலைக்காட்சியில் எமது திருமண வீடியோ படத்தை பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். உள்ளே வா மது என்று வஸந் அவள் கைபற்றி இடுப்பை அணைத்தவாறு உள்ளே மெதுவாக அழைத்துச் சென்றான். அவள் விம்மி அழுதவாறு உள்ளே சென்றாள். அவளின் சிவந்த கண்களிலிருந்து வடிந்த கண்ணீர், முகத்தை நனைத்திருந்த மழை நீருடன் இரண்டறக் கலந்தது.

## மேலதிக காயங்கள்



கொஞ்சம் ஊர் மரக்கறிகளுடன்
வீதியோரத்தில் குந்தியிருக்கும்
முதுமையடைந்த விற்பனையாளர்
முதுகு கேள்விக்குறியான
பின்னும் மூட்டை சுமப்பதை
நிறுத்த முடியாத தந்தையர்
படிக்கிற வயசுப் பிள்ளைகளை
பக்கத்தில் இருத்தியபடி
பிச்சை கேட்கும் பெண்மணிகள்
காலைச் சுற்றி வந்து
ஒரு பிடி உணவுக்காக
வாலை ஆட்டும்
தெருநாய்கள்
சோர்ந்து படுத்துக்கிடக்கும்
கைவிடப்பட்ட
பூனைக்குட்டிகளும் தாயும்
அன்றாடத் தேவைக்கு
வெளியிறங்கிச் சென்று
மேலதிக காயங்களுடன்
திரும்பி வரும் பேரிடர் எனக்குள்ளும்
தினமும் நிரம்பி வழிகிற துயரங்களும்
பசிக்கும் வயிறுகளும்
சந்தையிலும் வீதியோரங்களிலும்
உயிரோடு அலைக்கழிகின்றன
போவோர் வருவோரின்
முகங்களைப் பார்த்தபடி
சில உயிர்களையாவது
திருப்திப்படுத்துதலும்
நான் திருப்தியடைதலும்
அத்தனை சுலபமானதல்ல...



பாலையூற்று அஷ்ரபா நூர்தீன்

## குடி கெடுக்கும் குடி



மதியும் இழந்து நீயே
மயக்கமே கொள்ளலாமோ..?
சதியென மதுவும் வாழ்வை
சகதியில் வீழ்த்தும் பாராய்..!
விதியினை மதியால் வெல்வாய்
வீதியில் வீழாக் காப்பாய்..!
கதியென மதுவைக் கொண்டால்
கழிநிலை வாழ்வே மிஞ்சும்..!


குடியினால் குடும்ப வாழ்வும்
குலைந்திடும் அடிமையானால்..!
அடியுடன் வெறுத்து நீயும்
அழகிய உறவைக் காப்பாய்..!
நடிப்பென வுனது வாழ்வும்
நடுத்தெரு தனிலே ஆடும்..!
விடிவினைக் காணா தென்றும்
விரட்டுக குடியை இன்றே..!

படித்ததும் பாழாய்ப் போகும்
பண்பதும் முற்றும் நீங்கும்..!
இடித்திடும் வார்த்தைக் கூறி
இழிந்திடும் உலகம் நாளும்.
இடியெனத் துயரம் பெருகி
இனிமையும் மறைந்தே போகும்..!
துடித்திடும் இதயம் காக்கத்
துரத்திடுக் குடியை இன்றே..!



தமிழ்ப்புதல்வன்
க.த. யேசுசகாயம்

## ஆறடி



என் கவிதைக்கு எங்கும் நீதான் முதலடி
என் கற்பனை வரியினில் வருவது
உன்பெயரடி
எப்போதும் எழுதுவேன் என் கவி நாலடி
இலக்கண யாப்பினில் அதுவே அளவடி.
ஊரெல்லாம் உருவாவது இப்போசீரடி
உனக்கேதும் தெரியுமோ எனக்கதைக் கூறடி
யாரெல்லாம் அங்கு போகின்றார் பாரடி
யதார்த்தத்தைச் சொல்கிறேன்
கொஞ்சம் கேளடி.
புதிதாகக் கோயில்கள் ஏனடி
நம் பிள்ளையார் கோயிலின்று பாழடி
புதுக்கோயில் அமைப்பதுவே வீணடி
போகிறதோ இதற்காகப் பலகோடிக் காசடி.
கற்கோயில் கட்டவென்று நடந்த மோசடி
கனகோயில் தொடுத்துள்ளதின்று வழக்கடி
எக்கோயில் இதற்கிப்போ விலக்கடி
எவருள்ளார் இறைவனுக்கின்று பாடடி.
அனைவருக்கும் கோயிலன்று ஒன்றடி
அக்கால வணக்கமுறை மிகவும் நன்றடி
அதிகாலை எழும்பியங்கு நாம்சென்றடி
அருள்பெறுவோம் அவனிடமோ மன்றாடி.
கோயிலெல்லாம் நமக்கின்று காலடி
கும்பிடவே வருவதில்லை யாரும் நேரடி
கோயிலில்லா ஊரில் இருக்காது குடியடி
கொள்ளைதான் இன்றுள்ள தலையிடி.
வாக்குச் சொல்லும் கோயிலிலே அடிபிடி
வருடாந்தத் திருவிழாவில் பெரு சரவெடி
காப்புக்கட்டும் கோயிலிக்கு பலகுடி
கடவுளில்லை என்றுசொல்லிக் களவடி
காணவில்லை இன்னுமவன் திருவடி
கண்டுவிட்டால் நம்முன்னேற்றம் ஒருபடி
வாழவழி இல்லையென்றால் பேரிடி
வாழ்க்கை நம்முடிந்து விட்டால்
இறுதி ஆறடி...



நீலையூர் சுதா




ஆபிரிக்கா

### மர்ம காய்ச்சலால்

# 53 பேர் பலி

ஆபிரிக்கா நாடான கொங்கோ ஜனநாயக குடியரசில் அண்மை காலமாக மர்மக்காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது.

கடந்த மாதம் 21ஆம் திகதியன்று, வடமேற்கு பிராந்தியமான போலோகோ நகரில் இந்த நோய்ப் பாதிப்பு முதன்முதலாக கண்டறியப்பட்டதாக, உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆனால், தொடங்கிய ஒரு மாதத்துக்குள் சுமார் 420 பேருக்கு இந்த காய்ச்சல் பரவியுள்ளது. அவர்களில் 53 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையை அடுத்து, இது குறித்து தீவிர ஆய்வு மேற்கொண்டு வருவதாக, அந்த நாட்டின் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.




# இன்று ஆரம்பமாகின்றது பொன் அணிகளின் சமர்

■ எஸ்.நிதர்ஷன், புகழிந்தன்

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையிலான 108ஆவது பொன் அணிகள் சமர் என்று அழைக்கப்படும் கிரிக்கெட் போட்டியானது இன்று வியாழக்கிழமை (27) ஆரம்பித்து மூன்று நாள்களுக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி 175வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வாண்டு பொன் அணிகளின் போரின் வரலாற்றில் முதன் முறையாக மூன்று நாள்கள் போட்டியாக இது நடைபெறவுள்ளது.

இதுவரை காலமும் நடைபெற்ற போட்டிகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 35 தடவைகளும் யாழ்ப்பாணக் கல்லூரி 16 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன. 31 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததுடன் ஒரு போட்டி கைவிடப்பட்டது.

இப்போட்டியின் தொடர்ச்சியாக 32ஆவது ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ண த்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி மார்ச் எட்டாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கும், பிரான்சிஸ் யோசப் வெற்றிக் கிண்ணத்துக்கான ஐந்தாவது இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி மார்ச் 12ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களை கொண்ட ஒரு நாள் போட்டியில் 23 தடவைகள் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் 7 தடவைகள் யாழ்ப்பாணக்கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன. ஒரு போட்டி இடைநிறுத்தப்பட்டது.

இருபதுக்கு-20 போட்டிகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மூன்று தடவைகளும் யாழ்ப்பாணக் கல்லூரி ஒரு தடவையும் வெற்றி பெற்றுள்ளன.

புதுடெல்லி

### 1984 கலவர வழக்கு:

# முன்னாள் எம்.பிக்கு ஆயுள்தண்டனை



1984ஆம் ஆண்டு, சீக்கியர்களுக்கு எதிராக டெல்லியில் நடந்த கலவரத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் கொலை செய்யப்பட்ட வழக்கில், காங்கிரஸ் முன்னாள் எம்.பி சஜ்ஜன் குமாருக்கு, ஆயுள் தண்டனை விதித்து டெல்லி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

முன்னதாக, இந்த வழக்கில் சஜ்ஜன் குமாரை குற்றவாளி என டெல்லி நீதிமன்ற நீதிபதி காவேரி பவேஜா கடந்த 12ஆம் திகதி அறிவித்தார். மேலும், தற்போது திகார் சிறையில் இருக்கும் சஜ்ஜன் குமாரின் உடல் மற்றும் மனநிலை தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்யச் சிறைத் துறைக்கு நீதிபதி உத்தரவிட்டிருந்தார். தூக்குத் தண்டனை விதிக்கப்படுவதாக இருந்தால் அதற்கு முன் மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறை இது.

இந்நிலையில், இந்த வழக்கில், செவ்வாய்க்கிழமை (25) தீர்ப்பளித்த நீதிபதி காவேரி பவேஜா, குற்றவாளி சஜ்ஜன் குமாருக்கு ஆயுள் தண்டனை விதித்து உத்தரவிட்டார்.

"அவர் (சஜ்ஜன் குமார்) ஒரு பங்கேற்பாளர் மட்டுமல்ல, கும்பலுக்குத் தலைமை தாங்கியவர் என்பதற்கு போதுமான ஆதாரங்கள் கிடைத்துள்ளது" என்று நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தார்.

### கோப்பா டெல் ரே தொடர்:

# சமநிலையில் பார்சிலோனா-அத்லெட்டிகோ போட்டி



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான விலகல் முறையிலான கோப்பா டெல் ரே தொடரில், தமது மைதானத்தில் புதன்கிழமை (26) அதிகாலை நடைபெற்ற அத்லெட்டிகோ மட்ரிட்டுடனான முதலாவது சுற்று அரையிறுதிப் போட்டியை 4-4 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா சமப்படுத்தியது.

பார்சிலோனா சார்பாக பெட்ரி, பௌ குபர்சி, இனிகோ மார்டினெஸ், றொபேர்ட் லெவன்டோஸ்கி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். அத்லெட்டிகோ சார்பாக, ஜூலியன் அல்வரேஸ், அந்தோனி கிறீஸ்மன், மார்கோஸ் லொரன்டே, அலெக்ஸான்டர் சொர்லொத் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

### சர்வதேச மாஸ்டர்ஸ் லீக்:

# இங்கிலாந்தை வீழ்த்திய இந்தியா




சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடரில், நவி மும்பையில் செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்ற இங்கிலாந்து மாஸ்டர்ஸ் அணியுடனான போட்டியில் இந்திய மாஸ்டர்ஸ் அணி வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இங்கிலாந்து: 132/8 (20 ஓவ. ) (பந்துவீச்சு: தவால் குல்கர்னி 3/21 [4], பவான் நீகி 2/16 [4], அபிமன்யு மிதுன் 2/27 [4], இர்ஃபான் பதான் 0/25 [4])

இந்தியா: 133/1 (11.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: குர்கிரீரட் சிங் மன் ஆ.இ 63 (35), சச்சின் டெண்டுல்கர் 34 (21), யுவ்ராஜ் சிங் ஆ.இ 27 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: கிறிஸ் ட்ரெம்லெட் 0/14 [2], மொண்டி பனேசர் 0/7 [1])

போட்டியின் நாயகன்: பவான் நீகி.

ஜெர்மன்

# நடுவானில் விமானியை கடித்த சிலந்தி



நடுவானில் விமானியை சிலந்தி கடித்ததால் ஜேர்மனி-ஸ்பெயின் விமானத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

ஜெர்மனியின் டசல்டார்ப் நகரத்திலிருந்து ஸ்பெயின் நாட்டின் மேட்ரிட் நகருக்கு ஐபீரியா ஏர்பஸ் ஏ320 விமானம் சென்றுகொண்டிருந்தது. அந்த விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது, விமானியை சிலந்தி ஒன்று கடித்ததாகக் கூறப்படுகிறது.

இதனால் விமானிக்கு கடுமையான ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, விமானப் பணிப்பெண்கள், விமானிக்கு முதலுதவி சிகிச்சை அளித்தனர்.இதற்கிடையில், விமானம் திட்டமிட்டபடி மேட்ரிட் விமான நிலையத்தில் தரையிறங்கியது.

விமானத்தில் இருந்த அனைவரும் பத்திரமாக வெளியேற்றப்பட்ட பின்னர், விமானம் முழுவதும் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது.

ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட விமானியின் உடல்நிலை சீராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானத்தில் ஏற்றப்பட்ட லக்கேஜ் வழியாகச் சிலந்தி பூச்சி விமானத்திற்குள் நுழைந்திருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் காரணமாக ஐபீரியா ஏர்பஸ் ஏ320 விமானம் மேட்ரிட் விமான நிலையத்தில் சுமார் 3 மணிநேரம் நிறுத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# பாகிஸ்தானில் தங்கம் வென்ற விக்னராஜாவுக்கு பாராட்டு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

பாகிஸ்தான் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற தடகள போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற விக்னராஜ் விக்னராஜாவை அந்த தோட்ட மக்கள் மக்கள் அன்புடன் வரவேற்றனர்.

பாகிஸ்தான் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற தெற்காசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் கிராஸ்-கன்ட்ரி போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி தங்கப் பதக்கம் வென்ற விக்னராஜ் விக்னராஜாவை வரவேற்கும் விழா, அவரது பிறந்த இடமான தலவாக்கலையில் மில்லிடன் தோட்டத்தில் செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்றது.

தோட்டத் தொழிலாளர் குடும்பத்தில் பிறந்த விக்னராஜ் விக்னராஜா, இலங்கை இராணுவத்தின் விளையாட்டுப் பிரிவில் பணியாற்றி வருகிறார்.

பாகிஸ்தான் இஸ்லாமாபாத்தில் ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெற்ற தெற்காசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 10 கி.மீ தூரத்தை 31 நிமிடங்கள் 56 செக்கன்கள் 38 மில்லி செக்கன்களில் ஓடி, முதல் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றார்.





இந்தோனேசியா

# இந்தோனேசியாவில் நிலநடுக்கம்



இந்தோனேசியாவில், புதன்கிழமை (26) காலை 6.55 மணிக்கு (2255 GMT) சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 6.1ஆக பதிவாகியுள்ளது.

அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் வெளியிட்டுள்ள தகவல்களில் நிலநடுக்கம் காரணமாக எந்த சேதமோ அல்லது உயிரிழப்புகளோ ஏற்பட்டதாகத் தகவல் இல்லை என்று தெரிவித்துள்ளது. வடக்கு சுலவேசி மாகாணத்துக்கு அருகில் உள்ள கடலோரத்தில் 10 கிலோமீட்டர் (6.2 மைல்) ஆழத்தில், இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக, அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்புகளின் படி, சுனாமி ஏற்படுவதற்கான சாத்தியம் இல்லை என்று கூறியுள்ளது.

முன்னதாக கடந்த ஜனவரி 2021ஆம் ஆண்டு சுலவேசியை உலுக்கிய 6.2 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் காரணமாக 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

சீனா

### போலி தொலைபேசி மையம்:

# நால்வருக்கு ஆயுள்தண்டனை

போலி தொலைபேசி மையம் (call center) மோசடி கும்பலுக்கு உடந்தையாக செயற்பட்ட 4 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து, சீன நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மியான்மர், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில், அண்மை காலமாக போலி தொலைபேசி மையம் (call center) மோசடிகள் அதிகளவில் அரங்கேறுகின்றன. இதற்காக நல்ல சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பு தருவதாக ஆசை வார்த்தை கூறி படித்த இளைஞர்களுக்கு வலை விரிக்கப்படுகிறது.

ஆனால் அங்கு சென்ற பிறகு கடவுச்சீட்டு உள்ளிட்ட ஆவணங்களை வாங்கி வைத்துக் கொண்டு இணைய மோசடியில் ஈடுபட அவர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இதில் பெரும்பாலும் சீன தொழிலதிபர்களே குறிவைக்கப்பட்டதால் ஆங்கிலம், சீன மொழி தெரிந்த இளைஞர்களை மோசடி கும்பல் அதிகளவில் பணியமர்த்தியது.

இதிலிருந்துந்து ஆயிரக்கணக்கான சீன இளைஞர்கள் அண்மையில் மீட்கப்பட்டனர்.

இதற்கிடையே இதுதொடர்பான வழக்கு விசாரணை சீன நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கின் விசாரணை நிறைவடைந்த நிலையில், மோசடி கும்பலுக்கு உடந்தையாக செயல்பட்ட 4 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து சீன நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 27, பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.